# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044352

1. District மாவட்டம் : கோவை
   PS: காவல்நிலையம்: ஊ.த.க
   Year: ஆண்டு: 2021
   FIR No. மு.த.அ. எண்: 24/2021/AC/CB
   Date: நாள்: 14.10.2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988.
   Sections பிரிவுகள்: 7(a), 7(b) r/w 12
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2018.
   Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல்: 13.10.2021
   Date to : நாள் வரை: 14.10.2021
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல்: 19.00 மணி
   Time to : நேரம் வரை: 09.00 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 14.10.2021
   Time நேரம்: 14.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 14.10.2021
   Time நேரம்: 14.30 மணி

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 4 கிமீ தென் மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண்: –
   (b) Address முகவரி: உதவி இயக்குநர் அலுவலகம், கைத்தறி மற்றும் துணி நூல் துறை, கோவை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்: –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: V. சாந்தாமணி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: –
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்: –
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: துணை ஆய்வுக் குழு அலுவலர்.
   (g) Address முகவரி: மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர்-18.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திருமதி. M.S.K. பிரியா, உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை கோவை மாவட்டம்.
   (2) திரு. G. வினோ அருண்சேயசாமி, எழுத்தர், K.1658 கோயம்புத்தூர் தொழிலாளர் கைத்தறி நெசவாளர் உற்பத்தி விற்பனை சங்கம், கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………—…………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………—………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………—………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[illegible]
14/10/2021

15. Date & Time of despatch to the court: (வே. [illegible])
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.10.2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

R. [illegible]

Name: பெயர் R. [illegible],
Rank: நிலை ………………… No. எண் ………
காவல் ஆய்வாளர்,
[illegible],
கோவை.
14.10.2021.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

<u>கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.24/2021/AC/CB ச/பி. 7(a), 7(a) r/w 12 ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...</u>

இன்று 14.10.2021-ம் தேதி 14.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி. V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.24/2021/AC/CB u/s. 7(a), 7(a) r/w 12 of the PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018. ஆக வழக்கு 15.00 மணிக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திருமதி. V.சாந்தாமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் - 18. பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர்-30. ந.க.எண்.1007/2021/ஜ1, நாள்: 14.10.2021 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம்- உதவி இயக்குநர் அலுவலகம், கைத்தறி மற்றும் துணி நூல் துறை, சாய்பாபா காலனி - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர், கதவு எண்.23, பாரதிபார்க் 2வது குறுக்கு தெரு, சாய்பாபா காலனி, என்ற முகவரியில் இயங்கி வரும் கோவை மாவட்ட கைத்தறி மற்றும் துணி நூல் துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநர் அவர்கள் தனது அதிகார எல்லைக்குட்பட்ட கோவை-1 சரகம், கோவை-2 சரகம், பொள்ளாச்சி மற்றும் சிறுமுகை சரகங்களில் இயங்கி வரும் கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவு சங்க மேலாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் சேலை மற்றும் இதர துணிவகைகளுக்கு தள்ளுபடி மானியம் மற்றும் வட்டி மானியம் கோருவதற்கும், நூல் மற்றும் மூலப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலையடுத்து கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. V.சாந்தாமணி, கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் மேற்படி அலுவலகத்தை 13.10.2021-ம் தேதி சுமார் 18.35

மணிக்கு திடீர் சோதனை செய்ய விபரம் தெரிவிக்கப்பட்டு திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் மேற்படி தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் 13.10.2021-ம் தேதி சுமார் 18.35 மணிக்கு கோயம்புத்தூர், கதவு எண்.23, பாரதிபார்க் 2வது குறுக்கு தெரு, சாய்பாபா காலனி முகவரியில் இயங்கி வரும் கோவை மாவட்ட கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குநர் அவர்கள் அலுவலகத்திற்கு முன்பு வரப்பட்டது. அப்போது இவ்வலுவலகத்தினுடைய மேற்கு பார்த்த முன்வாயிலில் முன்புறம் நின்றிருந்த TN 38 G 0903 என்ற பதிவு எண் கொண்ட அரசு Bolero வாகனத்தின் அருகில் TN 38 CJ 0293 என்ற பதிவெண் கொண்ட Toyoto Etios என்ற கார் நின்று கொண்டிருந்தது. அந்த காரினுள் பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த இவ்வலுவலகத்தினுடைய உதவி இயக்குநர் திருமதி.M.S.K. சூர்யா என்பவர் காரின் பின் சீட்டில் கையில் இரண்டு பைகளுடன் அமர்ந்திருந்தார். அவரை வழியனுப்புவதற்காக பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த இவ்வலுவலகத்தில் பணிபுரியும் கைத்தறி அலுவலர் பொம்மையாசாமி, கைத்தறி ஆய்வாளர் ரவி மற்றும் கோயம்புத்தூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் கே.1658-ல் கிளார்க்காக பணிபுரியும் லியோ ஆரோக்கியதாஸ் ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தனர். உதவி இயக்குநர் சூர்யா அருகே சென்று எங்களை அறிமுகம் செய்துகொள்ள அவர் பதட்டத்துடன் காரிலிருந்து இறங்கினார். காரிலிருந்து இறங்கிய இடம் பொது வழிச் சாலை என்பதால் அவ்விடத்திற்கு மிக அருகில் இருந்த அவரது உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அவரையும் அங்கிருந்தவர்களையும் அழைத்துக் கொண்டு வரப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த SAKTHI SAREES (MFG), Ramnagar, Kaveri Rice Mill Backside Sathi Main Road, Sirumugai என்று அச்சடிக்கப்பட்ட காகித பையை சோதனை செய்ய, அதனுள் வெள்ளை கலர் அட்டைபெட்டியினுள் ரோஸ் நிற பட்டு சேலை இருந்தது. இது குறித்து சூர்யா அவர்களிடம் கேட்க, அவர் இன்று தனக்கு பிறந்த நாள் என்றும் அதற்கு தனக்கு கீழ் பணிபுரியும் சிறுமுகை துணி நூல் கட்டுப்பாட்டு அலுவலர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.க.ஜெயராணி கொடுத்ததாகவும் கூறினார். மேலும் அந்த காகிதப் பையிலிருந்த காக்கி கவரில் பணம் ரூ.1,03,000/- இருந்தது. அவைகள் (Rs.2000 X 1=2000, 500X199=99500 & 100X15=1500)

நோட்டுக்களாக இருந்தது. இது குறித்து கேட்க சூர்யா அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தார். பின்னர் அருகில் நின்றுகொண்டிருந்த லியோ ஆரோக்கியதாஸை விசாரிக்க தான் கோயமுத்தூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் கே.1658-ல் கிளார்க்காக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வலுவலகத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் சூர்யா அவர்களுக்கு கீழ்பணிபுரிவதாகவும், உதவி இயக்குநர் அவர்களுக்கு கீழுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினுடைய மேலாளர்களிடமும் மற்றும் இதர நிர்வாகிகளிடமும் கையூட்டாக பணம் கேட்டிருப்பதாகவும் அவர்கள் பணம் கொடுப்பார்கள் என்றும் அப்பணத்தை வாங்கி வைத்திருக்கும்படி இரண்டு நாட்களுக்கு முன்பு தன்னிடம் சொன்னதாகவும், அவர் ஊருக்கு 13.10.2021-ம் தேதி புதன்கிழமை மாலை புறப்படும்போது மேற்படி கையூட்டு பணத்தை வாங்கிக்கொள்வதாக தெரிவித்ததாகவும், அதன்படி 12.10.2021 ம் தேதி சிறுமுகை சரகத்திலிருந்து சேகர் என்கிற மேலாளர் ரூ.70,000/-ஐ தனது மேலாளர் சாவித்திரியிடம் கொடுத்ததாகவும், அவர் அதை வாங்கி தற்போதுள்ள காக்கி கவருடன் தன்னிடம் கொடுத்ததாகவும், மேலும் பொள்ளாச்சியினுடைய கைத்தறி ஆய்வாளர் திரு.ரவி, 12.10.2021-ம் தேதி ரூ.20,000/- தன்னிடம் கொடுத்ததாகவும், மேலும் கோயம்புத்தூர் 2-வது சரகத்தை சேர்ந்த திருமதி.சக்திகலா ரூ.13,000/-ஐ 11.10.2021-ம் தேதி கொடுத்ததாகவும், இவர்கள் கொடுத்த இந்த மூன்று தொகைகள் மொத்தம் ரூ.1,03,000/-ஐ தான் வாங்கி வைத்திருந்ததாகவும், சற்று முன் இவ்வலுவலக கைத்தறி அலுவலர் பொம்மையாசாமி தன்னை செல்போன் மூலம் தொடர்புகொண்டு உதவி இயக்குநர் சூர்யா அவர்கள் புறப்படவிருப்பதாகவும், தன்னை வரச்சொன்னதாக சொன்னதாகவும், தானும் அதன்படி மேற்படி தொகையை எடுத்துக்கொண்டு இங்கு சூர்யா அவர்களை பார்க்க வந்ததாகவும், வரும்போதே சூர்யா அவர்களும், பொம்மையாசாமியும், ரவியும் இவ்வலுவலகத்தினுடைய முன்புறம் நின்று கொண்டிருந்ததாகவும், தன்னை பார்த்ததும் தலையை மட்டும் சூர்யா ஆட்டியதாகவும், தானும் வந்து அவர்களுடன் நிற்க அப்போது Etios கார் வந்ததாகவும், அதன் பின் சீட்டில் சூர்யா அவர்கள் காரில் ஏறி அமர்ந்தவுடன் தன்னை அழைத்து அந்த காரின் முன் சீட்டில் வைக்கப்பட்டிருந்த காகித பையினுள் பணத்தை வைக்கச்சொன்னதாகவும், தானும் அதன்படி முன்புற சீட்டிலிருந்த பையினுள் மேற்படி காக்கி கவரினுள் இருந்த பணம் ரூ.1,03,000/-ஐ வைத்ததாகவும், அதன் பின்னர் சூர்யா இந்த பையை தன்னிடம் கொடுக்கச்சொல்ல தானும் கொடுத்ததாகவும், அவர் அதை வாங்கி தனது கையில்

வைத்துக்கொண்டதாகவும், மற்றொரு கையில் அவருடைய மற்றொரு கைப்பையை வைத்திருந்ததாகவும் அப்போது தாங்கள் வந்ததாகவும் கூறினார். எனவே மேற்படி காகித பையுடன் அதிலிருந்த பட்டுப்புடவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் காக்கி கவரினுல் இருந்த ரூ.1,03,000/-ம் சூர்யா அவர்கள் கையூட்டாக கேட்டு வாங்கிய பணம் என்பதால் அது விசாரணைக்காக காக்கி கவருடன் கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த காக்கி கவரின் மேல் Sirughi-7000, cbe-II-13000, Pollachi-20000 மொத்தம் 103000 என்றிருந்தது இது குறித்து லியோ ஆரோக்கியதாஸிடம் கேட்க, இதை தான் பென்சிலில் எழுதியதாகவும், Sirughi-7000 என்பது சிறுமுகை 70000 என்பதை குறிப்பதாகுமென்றும் கூறினார். மேலும் இந்த காக்கி கவரின் ஒட்டும் பகுதியில் சிறுமுகை Rs.70000/- என்றிருந்தது. இது குறித்து லியோ ஆரோக்கியதாஸிடம் கேட்க இதை இப்பணத்தை தனது மேலாளர் சாவித்திரி எழுதியதாகவும் கூறினார். மேலும் லியோ ஆரோக்கியதாஸ், உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள நான்கு சரகங்களில் மேற்படி சிறுமுகை, கோவை-2 மற்றும் பொள்ளாச்சி சரகங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகைதான் மேற்படி ரூ.1,03,000/-ம் என்றும் கோவை-1 சரகத்தில் இன்னும் இரண்டு கூட்டுறவு சங்கங்களிலிருந்து பணம் வரவேண்டியிருப்பதால் அந்த பணத்தை பெற்றபின் அது உதவி இயக்குநர் அவர்களிடம் கொடுக்கப்படும் என்றும், வசூலிக்கப்பட்ட மற்ற சங்கங்களின் தொகை தற்சமயம் தனது மேசையின் ட்ராயரில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அதனை தொடர்ந்து திரு.பொம்மையாசாமி அவர்களை விசாரிக்க தான் உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து பட்டுப்புடவை அடங்கிய காகித பையை சூர்யா சொன்னதின் பேரில் காரினுள் கொண்டு வந்து சற்றுமுன் வைத்ததாகவும், மேலும் தான் சிறிது நேரத்திற்கு முன்பு உதவி இயக்குநர் சொன்னதின் அடிப்படையில் லியோ ஆரோக்கியதாஸை போனில் அழைத்து வரச்சொன்னதாகவும் தெரிவித்தார். சூர்யா வைத்திருந்த மற்றொரு கைப்பையை சோதனையிட அதில் குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. அப்போது பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த ஜெயராணி அலுவலகத்திற்கு வந்தார். அவரை விசாரிக்க அவர் தான் சிறுமுகை ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்தின் துணி நூல் கட்டுப்பாட்டு அலுவலர்/மேலாண்மை இயக்குநராக பணிபுரிந்து வருவதாகவும், 13.10.2021-ம் தேதி தான் ஆணையர் அலுவலகத்திலிருந்து வந்த குற்றச்சாட்டு ரத்து செய்யப்பட்டதிற்குண்டான ஆணையை வாங்குவதற்காக வந்ததாகவும், வரும்போது சூர்யா அவர்களுக்கு

பட்டுப்புடவையை SAKTHI SAREES (MFG) என்கிற காகித பையுடன் பிறந்தநாளிற்காக கொடுத்ததாகவும் கூறினார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது கைப்பையிலிருந்து ரூ.20,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து அது தனது குடும்பத்தினருக்கு தீபாவளிக்கு துணி எடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அந்தபணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் உதவி இயக்குநர் அறைக்கு சென்று அங்கு சோதனையிட குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. அதனை தொடர்ந்து இவ்வலுவலகத்தில் பணிபுரிந்த பணியாளர்களை அவரவர் வைத்திருக்கும் பணம் குறித்து விசாரித்தபோது, திரு.பெ.பொம்மையாசாமி அவரது மணிபர்சிலிருந்து ரூ.1000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.ஆர்.ரவி என்பவர் அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.510/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் R.முனீஸ்வரன், ஓட்டுநர் (தனி நபர்), உதவி இயக்குநர் அவர்களின் ஓட்டுனர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.4250/-ம் மற்றும் ரூ.260/-ம் எடுத்து தனித்தனியாக ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரிடம் விசாரிக்க ரூ.4250/- தனது சம்பளப் பணம் என்றும், ரூ.260/- தனது சொந்தபணம் என்றும் தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பி.சோமசுந்தரம் அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.11,850/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவர் தற்போது தான் ATM-லிருந்து எடுத்த பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஆர்.மகேஷ்வரி அவர் தனது மணிபர்ஸிலிருந்து ரூ.10/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் S.ஆனந்தன் அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.310/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் N.கோகுல் அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணத்தை பற்றி அவரை விசாரிக்க அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்த பணத்தை

அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. லியோ ஆரோக்கியதாஸ் அளித்த தகவலின் பேரில் இவ்வலுவலக வளாகத்தின் வடகிழக்கில் அமைந்திருந்த கோயம்புத்தூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் கே.1658-ன் தெற்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்து வடமேற்கு மூலையில் கிழக்குபார்த்த வாசலுடன் அமைந்திருந்த அலுவலகத்திற்குள் லியோ ஆரோக்கியதாஸ் தனது மேசையின் ட்ராயரிலிருந்த இந்த மாதத்திற்குண்டான பணம் ரூ.57,970/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மேற்படி சரகங்களிலிருந்து பெறப்பட்ட தொகைகள் சம்பந்தமான குறிப்புச்சீட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அப்போது அவ்வலுவலக மேலாளர் திருமதி.சாவித்திரி மற்றும் தற்காலிக துணி மதிப்பீட்டாளர் திருமதி.சித்ரா ஆகியோர்கள் அங்கிருந்தனர். மேற்படி குறிப்பு சீட்டுகள் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த தொகைக்கான விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | தொகை ரூ. | தொகையின் விபரம் |
|---|---|---|---|
| 1 | பொம்மையா என்று எழுதபட்டு, பணம் விபரங்கள் குறிக்கப்பட்ட துண்டு சீட்டு ஒன்று | 6,000 | 500x10=5000<br>200 x5=1000 |
| 2 | டிரைவர் என்று எழுதபட்டு பணம் விபரங்கள் குறிக்கப்பட்ட துண்டு சீட்டு ஒன்று | 10,000 | 2000x5=10000 |
| 3 | அன்னூர் குமாரபாளையம் காமாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவு விற்பனைசங்கம் லிட் நெ.K.1453 என்ற முகவரி அச்சிடப்பட்ட கவரின் பின்புறம் AD CBE அன்னூர் குமாரபாளைம் மற்றும் கெம்பநாயக்கன்பாளையம் என்று பென்சிலால் எழுதப்பட்ட கவர் ஒன்று. | 5,000 | 2000x1=2000<br>200x15=3000 |
| 4 | 01.10.2021 என்று தேதியிடப்பட்டு அதன் கீழ் AD, office E, Total என்றும் எழுதப்பட்டு, அதன் கீழ் பகுதியில் 10 கூட்டுறவு சங்கங்களின் பெயர்களுடன் தொகை எழுதப்பட்டிருந்த வெள்ளை தாள் ஒன்று. | 13,250 | 2000x1=2000<br>500x19=9500<br>50x35=1750 |
| 5 | Powerloom (Ravi) 13,500/-என்று பென்சிலால் எழுதப்பட்ட துண்டு சீட்டு ஒன்று. | 12,000 | 2000x3=6000<br>500x12=6000 |
| 6 | The Coimbatore Industrial Weavers Co-op Production and Sales Society Ltd No. K 1658, 201, Alagesan Road, Coimbatore-641011 என்று அச்சிடப்பட்ட கவரில் பின் பக்கத்தில் excess -ரூ. 6150 (15.9.21) என்று பென்சிலால் எழுதப்பட்ட வெள்ளைநிற கவர் ஒன்று | 6,150 | 500x12=6000<br>100x1=100<br>20x1=20<br>10x3=30 |
| 7 | The Coimbatorre Industrial Weavers Co-op Production and Sales Society Ltd No. K 1658, 201, Alagesan Road, Coimbatore-641011 என்று அச்சிடப்பட்டகவரில் பின் பக்கத்தில் excess-ரூ.4,200/- (30.9.21) என்றும் பேனாவால் எழுதப்பட்டிருந்த கிழிந்த நிலையில் இருந்த கவர் ஒன்று. | 4,200 | 500x8=4000<br>50x4=200 |

| | | | |
|---|---|---|---|
| 8 | மடித்து வைக்கப்பட்ட நிலையில் இருந்த பணம் | 1,370 | 500x2=1000<br>200x1=200<br>100x1=100<br>10x7=70 |
| மொத்தம் | | 57,970 | 146-நோட்டுகள் |

மேற்படி வரிசை எண். 1 முதல் 8 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் அதற்கான தொகைகள் அனைத்தும் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேலும் லியோ ஆரோக்கியதாஸிடம் வேறு ஏதேனும் பணம் உள்ளதா என்பதை பற்றி கேட்க அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்து மணிபர்ஸிலிருந்து ரூ.8,200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி விசாரிக்க அந்த பணம் அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அங்கிருந்த அவரது பேக்கிலிருந்து ரூ.22,400/- எடுத்து ஆஜர் செய்தார். அவைகள் (500 X 44 = 22,000 , 200 X 1 =200 & 100 X 2 = 200) நோட்டுக்களாக இருந்தது. அது குறித்து விசாரித்தபோது அதற்கு சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் லியோ ஆரோக்கியதாஸின் வருகை குறித்து அவ்வலுவலக வருகைப் பதிவேட்டினை பார்வையிட்டதில் 30.09.2021ம் தேதி வரை மட்டுமே கையெழுத்து செய்யப்பட்டிருந்தது. அக்டோபர் மாதத்தில் ஆரம்பநாள் முதல் இதுநாள்வரை கையெழுத்து செய்யாதிருப்பது குறித்து விசாரித்தபோது தான் அடிக்கடி வெளிவேலைகளுக்கு சென்றுவிட்டதால் கையெழுத்து செய்ய இயலவில்லை என்று தெரிவித்தார். மேலும் உதவி இயக்குநர், திருமதி. சூர்யா அவர்கள் வைத்திருந்த கைப்பேசி One Plus Nord CE 5G Model EB 2101 போனை எடுத்து ஆஜர் செய்ய கேட்டுக் கொண்டதின்பேரில் அவர் தனது Password-ஐ பதிந்து ஆஜர் செய்ததை பார்வையிட வாட்ஸ்ஆப்பில் H & T LEO CBE KOV என்று பதிவு செய்யப்பட்ட சில புகைப்படங்களும் September 9, 2021 என்ற தேதியில் cbe 1-13000 cbe 2-13000 pollachi - 20000 sirumughai -50000 received 12.13PM என்ற செய்தி பெறப்பட்டிருந்தது. அது குறித்து கேட்க அதுபற்றி அவரிடம் விசாரிக்க மேற்படி கைப்பேசி தன்னுடையது தான் என்றும் அதிலுள்ள செய்தி குறித்து தனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி செய்திகளடங்கிய கைப்பேசியின் Display ஆனது படம் எடுக்கப்பட்டு அதன் நகல் எடுக்கப்பட்டு அதில் This Message was found in my whatsapp number 7904493067 and it was used

by me and my another mobile no. is 7402094029 என்று உதவி இயக்குநர் திருமதி. சூர்யா அவர்களால் கைப்பட எழுதப்பட்டு அவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் லியோ ஆரோக்கியதாஸ் வைத்திருந்த கைப்பேசியை எடுத்து ஆஜர் செய்ய கேட்டுக்கொண்டதின்பேரில், அவர் வைத்திருந்த VIVO Y 20-i model போனை தனது Password- பதிந்து ஆஜர் செய்ததை பார்வையிட வாட்ஸ் ஆப்பில் surya AD madam என்று பதிவு செய்யப்பட்ட contact-ல் சில புகைப்படங்களும் September 9, 2021 என்ற தேதியில் cbe 1-13000 cbe 2-13000 pollachi - 20000 sirumughai -50000 received 12.13 என்ற செய்தி அனுப்பப்பட்டிருந்தது. அது குறித்து கேட்க அவர் தான் உதவி இயக்குநரின் உத்தரவின்பேரில் கோவை-1, கோவை-2, பொள்ளாச்சி மற்றும் சிறுமுகை ஆகிய சரகங்களில் பெறப்பட்ட மாதாந்திர மாமூல் பணத்தின் விபரம் அவையென தெரிவித்தார். மேலும் அதே தேதியில் 14:40-ல் SLM STU MALATHY என்ற செல் நம்பரை தனக்கு அனுப்பி அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபரிடம் பேசிவிட்டு அந்த நபரிடம் கொடுக்க சொன்னதின்பேரில் தான் அவரை தொடர்பு கொண்டு மேற்படி மாமூல் பணம் ரூ.96,000/-ஐ கவரில் போட்டு Womens Polytechnic பஸ் நிறுத்தத்தின் அருகில் வைத்து கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேலும் செல்போன்பற்றி விசாரிக்க மேற்படி செல்போன் தன்னுடையது தான் என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி செய்திகள் அடங்கிய கைப்பேசியின் Display ஆனது படம் எடுக்கப்பட்டு அதன் நகல் எடுக்கப்பட்டு அதில் இந்த Message ஆனது என்னுடைய வாட்ஸ்அப் எண் 8220007646ல் இருந்து எடுத்தது. இந்த எண் ஆனது என்னால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனது வாடஸ்அப் எண்ணிலிருந்து இந்த செப்டம்பர் 9ஆம் தேதி A.D. சூர்யா மேடத்திற்கு என்னால் அனுப்பப்பட்டது என்று லியோ ஆரோக்கியதாஸால் கைப்பட எழுதப்பட்டு சான்றொப்பம் பெறப்பட்டதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது திருமதி.ஜெயராணி, லியோ ஆரோக்கியதாஸ் மற்றும் பொம்மையாசாமி ஆகியோர்களிடம் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது கீழ்கண்ட ஆவணங்களின் நகல்கள் சான்றொப்பமிட்டு பெறப்பட்டது.

| S. No | Name of the Documents |
|---|---|
| 1. | கொடுபடா சம்பள பதிவேடு நகல் (Un disbursement Register) (பி-பிரிவு), (பக்கம் 1முதல் 8 வரை) |

| | |
|---|---|
| 2. | கொடுபடா இதர பதிவேடு நகல் (Un disbursement Register) (பி-பிரிவு), (பக்கம் 1 முதல் 12 வரை) |
| 3. | வருகை பதிவேடு நகல் 2021 (அ-பிரிவு), (பக்கம் 1முதல் 12 வரை) |
| 4. | நிலையான முன்பணப் பதிவேடு நகல் 2021 (பி-பிரிவு), (பக்கம் 1 முதல் 12 வரை) |
| 5. | துணை ரொக்கப் பதிவேடு நகல் 2021 (பி-பிரிவு), (பக்கம் 1 முதல் 10 வரை) |
| 6. | நடமாடும் பதிவேடு நகல் 2021 (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 6 வரை) |
| 7. | முகாம் பதிவேடு நகல் 2021 (Vol-II) (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 12 வரை) |
| 8. | அனுமதி பதிவேடு நகல் 2021 (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 8 வரை) |
| 9. | உதவி இயக்குநர் பணிமாறுதல் அரசாணை எண்.81 நாள்.16.07.2021 மற்றும் கோவை கைத்தறி மற்றும் துணி நூல் அலுவலகத்தில் பணிசேர் அறிக்கையின் நகல் (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 4) |
| 10. | கோவை கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அவர்களின் அலுவலக ஈப்பு ஓட்டுநருக்கான ஊதிய ஆணை எண்.ந.க.7/2020/அ (நாள். .10.2021) நகல் (பக்கம் 1 மற்றும் 2) |
| 11. | கைத்தறி நெசவாளர் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடைய பெயர் பட்டியலின் நகல் (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 4) |
| 12. | கைத்தறி நெசவாளர் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடைய மேலாண்மை இயக்குநர்களின் பெயர் பட்டியலின் நகல் (அ-பிரிவு), (பக்கம் 1 முதல் 8 வரை) |
| 13. | விரைவுக்குறிப்பாணை ந.க.எண்.3982/2021/இ.நாள்09.10.2021-ன் நகல் (இ-பிரிவு), (பக்கம் 1 மற்றும் 2) |
| 14. | கோயம்புத்தூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் கே.1658-ல் அலுவலக வருகைப்பதிவேடு நகல் (பக்கம் 1 முதல் 8 வரை) |

இந்த திடீர் தணிக்கையின்போது பணம் ரூ.1,83,370/-ம் மற்றும் ஆவணங்கள் விசாரணைக்காக கைபற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை சம்பந்தமான நடவடிக்கைகள் 13.10.2021-ம் தேதி 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 14.10.2021-ம் தேதி 09.00 மணிக்கு முடிக்கப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,83,370/-ம் மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் திருமதி. M.S.K. சூர்யா, உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை, கோவை மற்றும் திரு.G.லியோ ஆரோக்கியதாஸ், எழுத்தர், தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் கே.1658, கோயம்புத்தூர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,83,370/-, 3) Sirughi-7000, cbe-II-13000, Pollachi-20000 மொத்தம் 103000 என்று எழுதப்பட்டிருந்த காக்கி நிற கவர் ஒன்று, 4) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 1 முதல் 3 வரையிலானவை, 5) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், 6) குறிப்பு சீட்டுகள் மூன்று, 7) இரண்டு கவர்கள்,

வெள்ளை நிற கவர் மற்றும் வெள்ளை நிற தாள், 8) SAKTHI SAREES (MFG), Ramnagar, Kaveri Rice Mill Backside Sathi Main Road, Sirumugai என்று அச்சடிக்கப்பட்ட காகித பை மற்றும் அதனுள் வெள்ளை கலர் அட்டைபெட்டியினுள் ரோஸ் நிற பட்டு புடவை. (Sdxxxx) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். Sir, Received the complaint on 14.10.2021 at about 14.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.24/2021/AC/CB u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at about 15.00 hrs (Sdxxxxxx) R.EZHILARASI, (14.10.2021) Inspr of Police, VAC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

(R.எழிலரசி) 14/10/2021

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.